என்ற வாக்குறுதி அளித்து, *2006* ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது இந்தத் தி.மு.க. அரசு. தற்போது ஆளுநர் உரையில், *2* இலட்சத்து *11* ஆயிரத்து *356* ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையில் குறுக்கிடுவதாகக் கருதவேண்டாம். '55 இலட்சம் ஏக்கர் என்று சொன்னீர்களே, அது என்னவாயிற்று?' என்று கேட்கிறார்கள்? '2 இலட்சம் ஏக்கர்தானே கொடுத்திருக்கிறீர்கள்' என்று கேட்கிறார்கள். அது உண்மைதான். *55* இலட்சம் ஏக்கர் என்று அ.தி.மு.க.-வினுடைய நிதிநிலை அறிக்கையிலேதான் தெரிவிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு, நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, அ.தி.மு.க. வெளியிட்ட நிதிநிலை அறிக்கையிலே உள்ள *55* இலட்சம் ஏக்கர் என்பதை நாங்களும் நம்பி, அதை ஏற்றுக்கொண்டு, *55* இலட்சம் ஏக்கர் என்று சொன்னது உண்மை. அடுத்த ஆண்டே அதைத் திருத்திக்கொண்டு, நாங்கள், 'நீங்கள் வெளியிட்ட புள்ளிவிவரத்தை நம்பி இதை வெளியிட்டுவிட்டோம்' என்று குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, *55* இலட்சம் ஏக்கர் நிலம் என்று சொன்னது நாங்களல்ல. அ.தி.மு.க. அரசினுடைய நிதிநிலை அறிக்கை. ஆதாரம் தேவையென்றால் *(குறுக்கீடுகள்)* அந்த ஆதாரத்தைச் சட்டசபையிலேயே படித்திருக்கிறோம். *(கூச்சல்-குழப்பம்)* சத்தம் போட்டு, ஒலியெழுப்பி உங்கள் தலைவருடைய பேச்சைக் காப்பாற்றி விடலாம் என்று கருதாதீர்கள். நாங்கள் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், அவையில் நாம் சில மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளலாம். ஆனால், கூச்சல் போட்டு, உங்கள் தலைவருடைய பேச்சுக்கு நீங்களே இடையூறு செய்ய வேண்டாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சில் யார் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலுள்ள அனைவரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த *55* இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தைப் பற்றி *2006* ஆம் ஆண்டிலிருந்தே முதல்வர் அவர்கள் தவறான தகவல்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். எங்கள் ஆட்சிக் காலத்தில்

2010 ஜனவரி 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் பண்படுத்தப்படும் என்று அறிவித்தோமே தவிர, அந்த 55 இலட்சம் ஏக்கர் நிலமும் அரசிடம் இருக்கிறதென்று எங்கேயும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் அதைக் காட்டட்டும் பார்க்கலாம். ஆகவே, நாங்கள் சொன்னதைத் தவறாகப் புரிந்துகொண்டு, அதன் அடிப்படையில் . . .

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், 55 இலட்சம் ஏக்கர் நிலம் பண்படுத்தப்படும் என்று சொன்னதைத்தான் நம்பி, அப்படிப் பண்படுத்தப்பட்டால் அதைப் பாமர மக்களுக்கு, ஏழையெளியவர்களுக்குத் தரலாம் என்று அறிவித்தோம்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அறிவிப்பைத் தற்போதைய முதல்வர் தவறாகப் புரிந்துகொண்டால், அது எங்களுடைய தவறல்ல. அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. எங்களுடைய நிதிநிலை அறிக்கையில், பட்டா நிலங்கள் உட்பட, பல ஏழை விவசாயிகளிடம் இருந்த ஒட்டுமொத்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் பண்படுத்தப்படும் என்றுதான் சொன்னோம். அதில் எத்தனையோ நிலங்கள், பட்டா நிலங்கள், ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானது. 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலமும் அரசிடம் இருக்கிறது என்று எங்கேயும் இதுவரை நாங்கள் சொல்லவில்லை. எனவே, நான் ஆளுநர் உரைக்கு வருகிறேன். தற்போது ஆளுநர் உரையில் 2 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால், மீதமுள்ள 53 இலட்சம் ஏக்கர் நிலம் என்னவாயிற்று? அதைப்பற்றி ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 53 இலட்சம் ஏக்கர் நிலம் என்னவாயிற்று, என்னவாயிற்று என்று